**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.20
https://ngmtamil.in/

# சுந்தரர் தேவாரத்தின்வழி கொங்குநாட்டு வாழ்வியலும் பண்பாடும்

**திருமதி து.சுபஸ்ரீ,**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),

கோயம்புத்தூர்-29.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்திலுள்ள பல வகைப்பட்ட நாடுகளில் சீர்மிகு வளமையும் சிறப்புமிகு வாழ்வியலையும் கொண்ட நாடு கொங்குநாடு. இயற்கையோடு இயைந்த வாழ்வியலையே பண்பாடாகக் கொண்டது கொங்குநாடு. இச்சிறப்பு வாய்ந்த கொங்குநாட்டிலுள்ள தலங்களையெல்லாம் தரிசிக்கும் நோக்கில் நடுநாட்டினின்று தம்பிரான் தோழராகிய சுந்தரர் வருகிறார். இங்குள்ள தலங்கள்தோறும் சென்று இறையின்பத்தைப்பாடியதோடு மட்டுமல்லாமல் கொங்குநாட்டின் வாழ்வியலையும் சேர்த்தே பாடியுள்ளார். இப்பாடல்களின்வழி கொங்குநாட்டின் தனித்துவமான வாழ்வியல், பண்பாடு ஆகியவற்றை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வாகும்.

**திறவுச் சொற்கள்**

கொங்குநாட்டுத்தலங்கள், நில நீர் வளம், மக்கள், கலைப்பண்பாடு

**ஆய்வு எல்லை**

சுந்தரர் இயற்றிய ஏழாம் திருமுறை ஆய்வின் எல்லையாக அமைகிறது.

**முன்னுரை**

சைவத் திருமுறைகளில் ஏழாம் திருமுறையாகத் திகழும் சுந்தரரின் தேவாரப் பாடல்களில் கொங்குநாட்டைச் சார்ந்த திருத்தலங்களைப் பற்றிய பாடல்கள் பக்தியை வெளிப்படுத்துகிறது என்பதையும்தாண்டி கொங்குநாட்டின் வாழ்வியலையும் பிரபலிக்கும் வகையில் அமைந்துள்ளது**.** இவ்வாறாக, கொங்குநாட்டின் இயற்கை வளம், பண்பாடு, இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றினை சுந்தரரது பாடல்களைச் சான்றாகவைத்து விளக்கும் வகையிலே இவ்வாய்வு அமைகிறது.

**சுந்தரர் பாடிய கொங்குநாட்டுத் தலங்கள்**

- **திருவெஞ்சமாக்கூடல்**
- **திருப்பாண்டிக்கொடுமுடி**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

- **திருமுருகன்பூண்டி**
- **திருப்புக்கொளியூர் அவிநாசி**

ஆகியவை கொங்குநாட்டில் சுந்தரரால் பாடப் பெற்ற தலங்களாகும்.

**நில மற்றும் நீர் வளம்**

கொங்குநாடு நில வளமும் நீர் வளமும் கொண்ட இயற்கை எழில் சூழ்ந்த இடமாகத் திகழ்வதைச் சுந்தரர் திருவெஞ்சமாக்கூடல் பதிகத்தில்

**“எறிக்குங்கதிர் வேயுதிர் முத்தமோடு**
**ஏலம்இலவந்கம் தக்கோலம் இஞ்சி**
**செறிக்கும் புனலுட்பெய்து கொண்டுமண்டித்**
**திளைத்தெற்றும் சிற்றாறதன் கீழ்க்கரையின்மேல்**
**முறிக்கும்தழைமா முடப்புன்னை ஞானல்**
**குறிக்கத்திகள் மேல்குயில் கூவலறா**
**வெறிக்கும்கலை மாவெஞ்சமாக் கூடல்**
**விகிர்தா அடியேனையும் வேண்டுதியே”**
**(சுந்.தேவா.425, ப.332)**

கொங்குநாட்டின் ஒரு பகுதியாகிய திருவெஞ்சமாக்கூடலில் கரையை நெருங்கிப்பொருந்தி மோதுகின்ற சிற்றாறுள்ள காரணத்தால் சோலைகளும் செழித்து வளரக் கூடிய வகையில் மாமரம், புன்னைமரம், குங்கும மரம், குருக்கத்திமரம் எனக் கொங்குநாட்டிற்கே உரித்தான பல மர வகைகள் உள்ளன. எனவே, வற்றாத ஆறுகளும், ஆறுகளால் வளம் பெறக்கூடிய சோலைகளும் இருந்தமையால் கொங்குநாடு பசுமை மாறா இயற்கை எழிலோடு திகழ்ந்தது என்பதை அறியலாம்.

**பரிசில் வழங்குபவர்கள் அதிகமுள்ளமை**

நில, நீர் வளம் சிறப்பானதாக இருப்பதால் இங்குள்ள மக்கள் செலவ வளம் பொருந்தியவர்களாகவே இருந்துள்ளனர்.இதனைச் சுந்தரர்

**“காடும் மலையு ந்நாஅ டும்மிடறிக்**
**கதிர்மாமணி சந்தன மும்மகிலும்**
**சேடன்னுறை யும்மிடந் தான்விரும்பித்**
**திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரையின்மேல்**
**பாடல்முழ வுங்குழ லும்மியம்பப்**
**பணைத்தோளியர் பாடலொ டாடலறா**
**வேடர்விரும் பும்வெஞ்ச மாக்கூடல்**
**விகிர்தாஅடி யேனையும் வேண்டுதீயே”**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**(சுந்.தேவா.பா.432 , ப.337)**

சிற்றாறு, ஒளிவீசுகின்ற சிறந்த மணிகளையும், சந்தன மரங்களையும், அகிலையும் காடு(முல்லை), மலை(குறிஞ்சி), நாடு(மருதம்) என முந்நிலங்களிலும் சிதறி இருக்கும் வகையில் திருவெஞ்சமாக்கூடலில் வந்து சேர்ப்பதால் முந்நில வளங்களும் பொருந்திய வகையில் இத்தலமானது இருக்கிறது. மேலும் பரிசில் வழங்குவோர் மிகுதியாக இப்பகுதியில் இருந்தமையால் ஆடுதலோடு பாடல் ஆடுதல் செய்ய ஒழியாத கூத்தர்கள் விரும்பி அதிகமாக வருந்தனர். ஆகையால் எப்பொழுதும் திருவெஞ்சமாக்கூடலில் கூத்தர்களின் மத்தளவோசையும் குழலோசையும் இடையறாது ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

**கொங்குநாட்டில் பெண்கள்**

**“விரும்பி நின்மலர்ப் பாத மேநினைத்**
**தேன்வி னைகளும் விண்டன**
**நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற**
**நின்ற காவிரிக் கோட்டிடைக்**
**குரும்ரப மென்முலைக் கோதை மார்குடைத்**
**தாடு பாண்டிக் கொடுமுடி**
**விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும்நா நமச்சிவாயவே.”**

**(சுந்.தேவா.பா.494,ப.381)**

மெல்லிய உடலமைப்பைக்கொண்ட பெண்கள் காவிரி நீரிலே மூழ்கி விளையாடி களிக்கும் நல்லதொரு சூழ்நிலையைக் கொண்டதாக காவிரிக்கரைத் திருப்பாண்டிக்கொடுமுடித் தலம் அமைந்துள்ளது.

**கொங்குநாட்டு மக்கள்**

பல தலங்களைத் தரிசித்த சுந்தரர் திருபாண்டிக்கொடுமுடி அடைகிறார். தன் பதிகங்களின்வழி அந்தந்த நிலத்தின் சூழலைப்பதிவுசெய்துகொண்டே வரும் சுந்தரர் கொங்குநாட்டில் அமைந்துள்ள திருப்பாண்டிக்கொடுமுடி தலத்தின் சிறப்பையும் தன் இறை அனுபவத்தையும் பதிவுசெய்கிறார்.

**“மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்**
**பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன்**
**கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக்கொடுமுடி**
**நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்சொல்லும்நா நமச்சி வாயவே”**

**(சுந்.தேவா.பா.488 ப.376)**

கற்றவர்களெல்லாம் நிறைந்த பகுதியாக கொங்குநாட்டுக் கறையூர் அமைந்துள்ள என்பதனைப் பதிவுசெய்கிறார். மேலும் கற்றவர்களெல்லாம் வரும்பித் தொழுகின்ற பெருமைமிகு தலமாக் கொந்குநாட்டுத் திருப்பாண்டிக்கொடுமுடி அமைந்துள்ளது என்பதனை சுந்தரரின் பாடலின்வழி அறிய முடிகிறது.

**வடுக வேடுவ மக்களின் வாழ்க்கை முறை**

தன் நண்பராண சேரமான் பெருமான் கொடுத்த பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு திருவாரூருக்குசி செல்லும் வழியில் திருமுருகன்பூண்டிக்கு அருகில் செல்லுகையில் சிவபெருமான் பொருட்களையெல்லாம் பறித்துக்கொண்டதாக வரலாறு. இதில் வேடுவரின் இயல்பு, வாழ்வியல் செய்திகளையும் பகர்கிறது.

**“கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் வரவலாமைச்சொல்லித்**
**திடுகு மொட்டெனக் குதிதிக் கூறைகொண்டு ஆறலைக்குமிடம்**
**முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டி மாநகர்வாய் இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே”**

**(சுந்.தேவா.498, பக்.385,386)**

முடைநாற்றம் வீசுகின்ற உடம்பையும், வளைந்த வில்லையும் உடைய வடுக வேடுவர், வழியல் வருவோரையெல்லாம் திடுகு, மொட்டு என்று அதட்டி அச்சுறுத்தி அவர்களது உடைகளையெல்லாம் பறித்துக்கொள்ளுவர்.மேலும்,

**“பீறற் கூறை உடுத்தோர் பத்திரங் கட்டி வெட்டினராய்ச்**
**சூறைப் பங்கியராகி நாள்தொறும் கூறை கொள்ளுமிடம்”**

பறித்துக்கொண்ட பொருட்களையெல்லாம் பங்கிட்டுகொள்ளும் தன்மையுடையவர்களாகவும் வடுக வேடுவர் உள்ளனர். சுந்தரரின் இத்திருமுருகன் பூண்டிப் பதிகம், கொங்குநாட்டு வனாந்தரப் பகுதிகளில் வாழ்ந்த வேடுவ மக்களின் வாழ்க்கை முறை, அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் மற்றும் அவர்களின் பொருளாதாரச் சிக்கலையும் எடுத்துரைக்கும் வகையிலமைகிறது.

**கலைப்பண்பாடு**

கொங்குநாட்டில் இசைக்கப்பட்ட இசைக்கருவிகள் குறித்த குறிப்புகள் சுந்தரர் தேவாரத்தில் திருமுருகன்பூண்டிப் பதிகத்தில் இடம்பெறுகிறது. இதில்

**“விட்டிசைப்பன கொக்கரைகொடு கொட்டி தத்தளகம்**
**கொட்டிப் பாடும் துந்துபியொடு குடமுழா நீர் மகிழ்வீர்**
**மொட்டலர்ந்து மணம்கமழ் முருகன்பூண்டி மாநகர்வாய்**
**இட்டபிச்சைகொண்டு உண்பதாகில்நீர் எத்துக்கிங்கிருந்தீர்**

**- எம்பிரானீரே.**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**(சுந்.தேவா.503, ப.388)**

கொட்டிப்பாடக்கூடியதும், தாளத்திற்கு ஏற்ப விட்டுவிட்டு ஒலிக்கின்றதுமான கருவிகள் கொக்கரை, கொடுகொட்டி, தத்தளகம், துந்துமி, குடமுழா ஆகியவையாகும். இவையெல்லாம் கொங்குநாட்டில் வடுக வேடுவர்களும், இறைவனும் இசைக்கும் கருவியாகவும் இவை அமைந்துள்ளன. மேலும் அந்தந்த பகுதிகளில் கிடைக்கக்கூடிய பொருள்களையே இறைவன் திருவுருவத்திற்கும் கொடுப்பது வழக்கம், ஆகையால் இம்மக்கள் இசைக்கின்ற இசைக்கருவிகளையே இறைக்குக் கொடுத்துள்ளனர் போலும் ஆகையால்தான் இறையும் மேற்காண்ட இசைக் கருவிகளையிசைப்பதாகச் சுந்தரர் பாடியுள்ளார்.

**முடிவுரை**

சுந்தரர் தேவாரம் இறைச் சிறப்பினைக்கூறும் பக்தி இலக்கியமாக மட்டுமல்லாமல் அந்தந்த தலங்களின் நிலையையும் எடுத்துரைக்கும் கண்ணாடியாகவும் திகழ்கிறது. அதிலும் குறிப்பாக சுந்தரரின் தலப் பயணத்தின்போது வந்த கொங்குநாட்டின் வாழ்வியலைத் தேவாரம் நயமாக எடுத்துரைக்கிறது. அச்சான்றுகளையெல்லாம் வைத்தே **சுந்தரர் தேவாரத்தின்வழி கொங்குநாட்டு வாழ்வியலும் பண்பாடும் என்ற இவ்வாய்வு** மேற்கொள்ளப்பெற்றது. இதன்மூலம் தற்காலத்தவரும் கொங்குநாடு பற்றி அறிந்து கொள்ள இவ்வாய்வு உதவும் என்பதனை உறுதிப்படுத்துகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)